## அறிவார்ந்த, சமத்துவ சமூகம் உருவாக,

# மத - சாதிய வெறுப்புணர்வை மாணவர்களிடம் விதைக்க வேண்டாம்!

### சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. மாணவர் அணிக் கூட்டத்தில் ஆ.இராசா எம்.பி. தனித் தீர்மானம்!

சென்னை, செப். 8-

தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட, மாநில, மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கூட்டம் நேற்று முன்தினம் (6.9.2024 - வெள்ளிக்கிழமை), காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், "கலைஞர் அரங்கத்தில்", கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., தலைமையில், அணியின் தலைவர் இரா.ராஜீவ்காந்தி, இணைச் செயலாளர்கள் சி.ஜெரால்டு, எஸ். மோகன், துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட, மாநில, மாநகர மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:**

**தீர்மானம் 1**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திருவாரூரில் தொடங்கப்பட்ட "தமிழ் நாடு தமிழ் மாணவர் மன்றத்தை"**

**இன்று தமிழ்நாடு முழுவதும் கல்வி நிலையங்களில் அமைக்க பணியாற்றுவீர்!**

தனது பள்ளி பவருவத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், மாணவ நண்பர்களுடன் சேர்ந்து துவக்கிய தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தை அவரது நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான 2026 சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவின், ஆலோசனையை ஏற்று, தலைமைக் கழகத்தால் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்களிடம் வழங்கப்படுகிற தமிழ் மாணவர் மன்ற உறுப்பினர் பதிவு படிவம் மற்றும் உறுப்பினர் அட்டையை கொண்டு தங்களது மாவட்டத்தில் உள்ள கல்லூரி உள்ளிட்ட கல்வி நிலையங்களில் "தமிழ் மாணவர் மன்றம்" உறுப்பினர் சேர்க்கையை முழுமூச்சுடன் தொடங்கி, மன்றத்தில் இணைந்தவர்களுக்கு அவர்களுக்கான உறுப்பினர் அட்டையை வழங்கிட வேண்டும். இப்பணியினை திட்டமிட்டு முறையாக மேற்கொள்ளும் வண்ணம் தலைமைக் கழகம் அறிவித்துள்ளபடி மாநில துணைச் செயலாளர்கள் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கழக மாவட்டங்களின் மாவட்டக் கழக செயலாளர் மற்றும் மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகளை ஒருங்கிணைத்து, செப்டம்பர் மாத இறுதிக்குள் இப்பணியினை மேற்கொள்ள இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது. மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கல்லூரிகளில் மன்றத்தில் சேர்ந்த உறுப்பினர்களின் நடத்தி, 2024-25 கல்வி ஆண்டிற்கான மன்றத்தின் நிர்வாகிகளை தேர்வு செய்து, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ள படிவத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் இரு நகல்கள் கொண்ட படிவத்தை பூர்த்தி செய்து, மாநில துணைச் செயலாளர்களிடம் வழங்க வேண்டும். மாநில துணைச் செயலாளர்கள் படிவத்தை பெற்று, பரிந்துரை செய்து மாநில செயலாளரிடம் கையொப்பம் பெற்று கல்லூரிகளில் அமைக்கப்பட்ட மன்றத்திற்கு ஒரு நகலை அறிவிப்பாக வழங்கிடவும், தலைமைக் கழகத்திடம் ஒரு நகலை பதிவு செய்யதற்கான வழிமுறையை பின்பற்ற இக்கூட்டம் முடிவு செய்கிறது.

**தீர்மானம் 2**

**தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை தடுக்கும் நோக்கத்தோடு தமிழ்நாட்டிற்கு நிதி தர மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனங்கள்!**

இந்திய அளவில் கல்வித் துறையில் பல்வேறு குறியீடுகளில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி கொண்டிருப்பதை நாடறியும். கல்வி மறுக்கப்பட்ட சமூகத்திற்கு உரிமை உடையதாய் மாற்றும் மாபெரும் கல்வி புரட்சியை ஏற்படுதியது நீதிகட்சி ஆட்சி காலம். அதனை தொடர்ந்து வந்த சில ஆட்சியாளர்கள் பல்லாயிரகணக்கான பள்ளிகளை மூடிய கொடுங்கோன்மை நடந்தேறியது. பின்னர் ஆட்சி பொறுப்பிற்கு வந்த பெருந்தலைவர் காமராசர் மூடப்பட்ட பல்லாயிர கணக்கான தொடக்கப் பள்ளிகளை மீண்டும் திறந்து ஏழை எளியோருக்கும் தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் உள்ளோருக்கும் தொடக்கக் கல்வி கிடைக்க செய்யப்பட்டது. இருப்பினும், இந்தி திணிப்பின் இறுக்கங்கள் இருந்து கொண்டே இருந்தது. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஆட்சி பொறுப்பிற்கு வந்த பின், தமிழ்நாட்டில் எப்போதும் இருமொழி கொள்கை தான் இருக்கும் என்று சட்டமாக்கினார். தமிழ் மொழி கல்வி மேலோங்கியது. உலக கல்வி ஆங்கில வழியில் பெற முடிந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின் கொண்டு வந்த பல்வேறு சீர்திருத்தங்கள் தொடக்க பள்ளியில் இருந்து உயர்நிலை, மேல்நிலை பள்ளி என்று கல்வியின் தரம் தமிழ்நாடு முழுவதும் பரவியது. பள்ளி படிப்போடு நின்று விடாமல், உயர் கல்வி பெற வேண்டுமென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்ட கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் ஏராளம்! ஏராளம்!

குறிப்பாக ஒரு மாநிலத்திலுள்ள மாணவர்கள் அனைவரும் பயிலக்கூடிய வகையில், ஒரே சீரான, சமநிலை, சமவாய்ப்பு கொண்டதாய் விளங்கிட சமச்சீர் கல்வியை கொண்டு வந்தார். 1996ஆம் ஆண்டிலே பள்ளிகளில் கணினியை அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் நல்லாட்சியின் மூலம், இல்லம் தேடி கல்வி, எண்ணும் எழுத்தும், நான் முதல்வன், உயர்கல்வி பயில புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், பள்ளி பயிலும் மழலையருக்கு காலை சிற்றுண்டி எனவும், கிராமப் புறத்தில் ஏழை, எளியோர் பயிலும் அரசுப் பள்ளிகளில் உலகத்தரம் வாய்ந்த ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகள், மாணவர் திறன் வளர்க்கும், வினாடிவினா, கலைத்திருவிழா, முதலமைச்சரின் விளையாட்டு போட்டி, இந்திய அளவிலான சுற்றுலா, வெளிநாட்டு சுற்றுலா என தமிழ்நாட்டு பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வியை இந்திய அளவில் அல்லாமல் உலக அளவில் உயர்த்தி பிடிக்கும் மண்ணாக தமிழ்நாடு விளங்குகிறது.

## 'தமிழ்நாடு மாணவர் மன்றம்' ஏற்படுத்துவோம்!

**"கல்வியினுடைய குறிக்கோள் என்பது அறிவை வளர்க்க, நமது இழிவையும் முட்டாள்தனத்தையும் மூடநம்பிகையையும் ஒழிக்க என்பதாக இருக்க வேண்டும்" என்ற தந்தை பெரியாரின் கொள்கை வழிநின்று கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களையும், சட்டங்களையும் நிறைவேற்றும் அரசாக பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி காலம் தொடங்கி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் கட்டமைக்கப்பட்டு, இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆட்சி காலம் வரை தொடர்கிறது.**

**அண்மைகாலமாக ஆன்மீகத்தின் பெயரால் மாணவர்கள் மத்தியில் பரப்பப்படும் சாதிய, மதவாத உணர்வுகளை முறியடித்து, இளைய தலைமுறையினரை அரசியல் சட்டம் வலியுறுத்தும் அறிவியல் தேடலோடு கூடிய (Scientific Temper) அறிவார்ந்த சமுதாயமாக கட்டமைத்திடவும், பகுத்தறிவுக் கொள்கைகளை மாணவர்கள் மத்தியில் விதைத்து பெரியார், அண்ணா, கலைஞர் காணவிரும்பிய சமத்துவ சமுதாயத்தை நிறுவிடவும், தி.மு.க மாணவரணி கல்வி நிலையங்களில் அமைக்க இருக்கும் 'தமிழ்நாடு மாணவர் மன்றம்' உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.**

இந்நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசால் கொண்டு வரப்பட்ட தேசிய கல்விக் கொள்கை 2020 என்பது, சமூகநீதி சமத்துவம் சமவாய்ப்புக்கு எதிரானதாகவும், அரசமைப்புச் சட்டம் வழங்கியிருக்கக்கூடிய மாநில அரசின் உரிமைகளுக்கும், தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கைக்கும் எதிரானது. அறிவியல் பூர்வமான கல்வி முறைக்கு மாறாக பழைமை வாதத்திற்கு உரியதாக உள்ளது. மூன்று, ஐந்து, எட்டு ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு கொண்டு வந்து, மாணவர்கள் பள்ளி படிப்பை நிறைவு செய்ய முடியாத வகையில் இடைநிற்றலை உருவாக்கி அனைவருக்கும் கல்வி வழங்கும் வாய்ப்பை சிதைக்கும் வகையில் உள்ளது போன்ற பலவேறு காரணங்களைச் சுட்டிக்காட்டி கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கையை கடுமையாக எதிர்த்து வருகிறார். மேலும் மாநில அரசுகளால் நிர்வகிக்கப்படும் பல்கலைக்கழகங்களின் உரிமைகளை சிதைத்து விட்டு, அனைத்து உயர் கல்வி நிலையங்களுக்கும் இந்திய அளவில் நுழைவுத் தேர்வு கட்டாயமாக்கும் முறைகளை கொண்டுள்ள தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்ளாது என்றும், தமிழ்நாட்டிற்கென தனி கல்விக் கொள்கை உருவாக்கப்படும் என அறிவித்துள்ளார்.

இந்நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்ளாத காரணத்தால், ஒன்றிய அரசின் 'சமக்ர சிக்ஷா அபியான்' (எஸ்எஸ்ஏ) திட்டத்தின் கீழ் ஒதுக்க வேண்டிய நிதியை விடுவிக்க மறுக்கிறது. அரசமைப்பு சட்டத்திற்கு முரணாகவும், மாநில உரிமைகளுக்கு எதிராகவும் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, இந்தியாவின் கல்வித் துறையில் முதல் மாநிலமாய் விளங்கும் தமிழ்நாட்டின் கல்வி கட்டமைப்பை சிதைக்க வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு கல்வித் துறையில் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் முன்னோடி திட்டங்களை முடக்கி விட வேண்டுமென்ற அரசியல் காழ்ப்புணர்ச்சி நோக்கத்தில் நியாயமாக வழங்க வேண்டிய நிதியை தர மறுக்கும் பா.ஜ.க. அரசின் இச்செயல்பாடு மிக கண்டனத்திற்குரியது.

எனவே, மாணவர்களின் நலனை கருத்திற்கொண்டு தமிழ்நாடு அரசிற்கு வழங்க வேண்டிய நிதியை விரைவாக வழங்கிட இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

**தீர்மானம் 3**

**தமிழ்நாட்டின் பாடத்திட்டத்தை விமர்சித்துள்ள ஆளுநர் ஆர்.என். ரவி பேச்சுக்கு கண்டனம்!**

சனாதனத்தை உயர்த்தி பிடித்துக் கொண்டு, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவர் வாக்கிற்கு எதிரான அனைத்து செயல்களையும் செய்துக் கொண்டு, வள்ளுவருக்கு காவிச் சாயம் பூசியும், உலகில் அனைவரும் சமம் என்று சொன்ன வள்ளலார் சனாதனவாதி என்ற புதிய கட்டுக்கதைகளை அவிழ்த்துவிட்டு, அனைத்து பல்கலைக்கழகங்களையும் அதன் துணை வேந்தர்களை கொண்டு முடக்கி வைத்து, கல்லூரிகளில் சமத்துவ, சமூகநீதி, தமிழ் உணர்வு இவற்றிற்கெல்லாம் எதிரான செயல்களை ஊக்குவிக்கக்கூடிய வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆளுநர் சமீபத்தில், தமிழ்நாட்டிலுள்ள கல்வி முறை தரமற்றது என்று விமர்ச்சித்திருப்பது கடுமையான கண்டனத்திற்குரியது. அவருடைய அபத்தமான பேச்சுக்கு மாநில அரசிற்கு எதிராகவும், திராவிட இயக்க சிந்தனைக்கு எதிராகவும், அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராகவும் உள்ளது.

சி.பி.எஸ்.சி. பாடத்திட்டத்தில் மனுதர்ம சாஸ்திரத்தை விவரிக்கும் கருத்துப்படங்களும், அறிவியலுக்கு மாறான புராண இதிகாச கருத்துக்களை உள்ளடக்கிய பாடங்களும் இருப்பதை நாடே அறியும். இந்திய விடுதலை போராட்டக் களத்தில் தமிழர்களின் பங்களிப்பை கூட மறைக்கும் பாடத்திட்டத்தை சி.பி.எஸ்.சி. கொண்டிருக்கும் நிலையில், அறிவியல் பூர்வமாகவும், தமிழர்களின் பண்பாடு மற்றும் தொன்மைகளை முழுக்கச் சொல்லியும், தமிழ்நாட்டில் குறிப்பாக தென்னகத்தில் ஏற்பட்ட சமூக விடுதலை போராட்டத்தின் வரலாறுகளையும் அவசியம் அறிந்து பாடத்திட்டத்தில் கொண்டுள்ளது தமிழ்நாடு அரசின் பாடத் திட்டம். அறிவியல் பூர்வமான அத்தனை முன்னெடுப்புகளையும், உலகளாவிய தொழில்நுட்ப வளர்ச்சியினை விரைவாக பாடத்திட்டத்தில் கொண்டு வந்து சேர்த்ததும் தமிழ்நாடு அரசு என்பதை மறுக்க முடியாது.

தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளும், பொறியியல் பட்டதாரிகளும் இன்று உலகின் தலைசிறந்த பொறியாளர்களாக, விஞ்ஞானிகளாக விளங்குவதே இதற்கு சான்றாகும். இஸ்ரோ என்று அழைக்கப்படுகிற இந்திய விண்வெளி ஆராய்சி நிலையத்தின் மிகப் பெரிய தலைமை பொறுப்பை வகித்தவர்கள் எல்லாம் தமிழர் என்பதும், அவர்கள் அரசுப் பள்ளியில் பயின்றவர்கள் என்பது கூடுதல் சான்றாகும். உலகின் தலைசிறந்த மருத்துவர்கள பயின்றது நமது தமிழ்நாட்டின் பாடத்திட்டங்களில் தான். இந்நிலையில், தமிழ்நாடு அரசின் பாடத்திட்டம் மேம்படுத்தப்பட வேண்டும், அது தரம் குறைவாக உள்ளது என்று விமர்சிக்கக்கூடிய ஆர்.எஸ்.எஸ். பயிற்சியாளரைப் போன்று செயல்படும் ஆளுநர் ஆர்.என். ரவியின் பேச்சுகளுக்கு தி.மு.க. மாணவர் அணி கடுமையான கண்டனத்தை தெரிவிக்கிறது. அவரது இந்த அணுகுமுறையை திருத்திக் கொள்ளாமல் இருப்பாரேயானால், கழகத் தலைவரின் அனுமதிப் பெற்று விரைவில் தி.மு.க. மாணவர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம், போராட்டங்களை முன்னெடுக்கும் என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் 4**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அருந்ததியர் சமுதாயத்திற்கு கொடுத்த 3% உள் ஒதுக்கீடு செல்லும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு வரவேற்பு!**

படிநிலைப்படுத்தப்பட்ட ஏற்றத்தாழ்வுடைய ஜாதிய அமைப்பில் கடைசி அடுக்கில் இருக்கும் அருந்ததியர் சமூக மக்களின் முன்னேற்றத்திற்காக தி.மு.கழக ஆட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2009 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 3% உள் ஒதுக்கீடு செல்லும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அவர்களின் தலைமையிலான 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு கடந்த ஆகஸ்ட் 1 ஆம் தேதி வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது. சமூக நீதியையும் சமத்துவத்தையும் தனது உயிர்மூச்சாய் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இட ஒதுக்கீட்டின் பலனை அருந்ததியர் சமூக மக்களும் பெற வேண்டும் என்பதற்காக கொண்டு வந்த "அருந்ததியர்களுக்கு 3% உள் ஒதுக்கீடு" சட்டம் 15 ஆண்டுகள் கழித்து உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சமூகநீதி கொள்கைக்கு கிடைத்த மாபெரும் வெற்றி.

ஒடுக்கப்பட்ட மக்களின் சம உரிமை நிலைநாட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஓய்வுபெற்ற நீதிபதி ஜனார்த்தனம் அவர்களின் தலைமையில் 2008 ஆம் ஆண்டு ஆணையம் ஒன்றை அமைத்து, அந்த ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 18% இட ஒதுக்கீட்டில் 3%(SCA) அருந்ததியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று 2009ஆம் ஆண்டு சட்டமியற்றினார். இந்த உள் ஒதுக்கீட்டிற்கு எந்தவிதமான சட்ட சிக்கல்களும் வந்து விடக் கூடாது என்பதற்காக துல்லியமான தரவுகளின் அடிப்படையில் அரசமைப்பு சட்ட விதிகளின் படி நிறைவேற்றினார். இந்த சட்டத்தை எதிர்த்து சிலர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர் மேலும் பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் கொண்டுவரப்பட்ட உள் ஒதுக்கீட்டுக்கு எதிராகவும் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்குகளையெல்லாம் ஒன்றாக விசாரித்த 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு பட்டியல் சாதி மக்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு முழு அதிகாரம் உள்ளது என்றும் அரசியல் சட்டத்தின் 14வது பிரிவை உள் ஒதுக்கீடு மீறவில்லை என்றும் தீர்ப்பு வழங்கியது.

சமூக நீதியையும் மாநில உரிமைகளையும் காக்கும் வகையில் வழங்கப்பட்டுள்ள இந்தத் தீர்ப்பை திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாணவர் அணி வரவேற்பதுடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்த இந்த சமூக நீதிப் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்து வைத்த நமது கழகத் தலைவர், திராவிட மாடல் முதல்வர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## தொழில் வளர்ச்சியில் தெற்கு ஆசியாவிலேயே தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக உயர்த்திய முதல்வருக்கு நன்றி!

**தீர்மானம் 5**

**தொழில் வளர்ச்சியில் தெற்கு ஆசியாவிலேயே முன்னணி மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி!**

2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்த இலக்கை நிர்ணயித்து அதற்காக பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறார் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் முதலீடுகளை ஈர்ப்பதற்கும், வேலை வாய்ப்புகளை பெருக்கிடவும் 200க்கும் மேற்பட்ட திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முன்னணி நிறுவனங்களுடன் மேற்கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளில் 31 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியதுடன், 9 லட்சத்து 74 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் தமிழ்நாட்டிற்கு ஈர்க்கப்பட்டுள்ளது. 20232024 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.19 சதவிகித பங்களிப்போடு இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், வேலை வாய்ப்புகளைப் பெருக்கவும் நமது தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 17 நாள் சுற்றுப்பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். அங்கு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சான்பிரான்சிஸ்கோவில் 29.8.2024 அன்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட்டு இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப் டெக்னாலஜி, இன்பிங்ஸ் ஹெல்த்கேர் மற்றும் அப்ளைடு மெட்டீரியல்ஸ் ஆகிய 6 நிறுவனங்களுடன் 900 கோடி ரூபாய் முதலீட்டில் 4,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், 30.8.2024 அன்று ஆப்பிள், கூகுள் மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில்முதலீடுகளை மேற்கொள்ள அழைப்புவிடுத்ததோடு, கூகுள் நிறுவனத்துடன் தமிழ்நாட்டில் செயற்கைநுண்ணறிவு (Artificial Intelligence) ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும், 31.8.2024 அன்று ஓமியம் நிறுவனத்துடன் எலக்ட்ரோலைசலர்கள் உற்பத்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் துறையில் 500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டன. 3.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில், ஈட்டன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 200 கோடி ரூபாய் முதலீட்டில், 500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் ஈட்டன் நிறுவனத்தின் உற்பத்தி வசதியை விரிவாக்குவதுடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உலகளாவிய பயன்பாட்டு பொறியியல் மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. 05.09.2024 அன்று டிரைலண்ட் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 2000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்சாலை மற்றும் உலக சேவை மையத்தை தமிழ்நாட்டில் அமைப்பதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டை தெற்கு ஆசியாவிலேயே முன்னணி மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற உயர்ந்த லட்சியத்துடன் பல்வேறு முன்னெடுப்புகளை, திட்டங்களை செயல்படுத்தி வரும் நமது தமிழ்நாடு முதலமைச்சர்கழகத் தலைவர் அவர்களை தி.மு.க. மாணவர் அணி நன்றி உணர்வுடன் பாராட்டுகிறது.

**தீர்மானம் 6**

**இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக தமிழ்நாட்டை உயர்த்திய இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் இளந்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பல்வேறு முன்னெடுப்புகளால் சர்வதேச அளவில் விளையாட்டுத் துறையில் அனைவரின் கவனத்தையும் தமிழ்நாடு ஈர்த்து வருகிறது. குறிப்பாக திராவிட மாடல் ஆட்சி அமைந்தவுடன் செஸ் ஒலிம்பியாட் போட்டி, சென்னை ஓபன் டென்னிஸ் தொடர், பன்னாட்டு அலைச்சறுக்குப் போட்டி, ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டி, ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி, கேலோ இந்தியா 2023 போன்ற சர்வதேச அளவிலான போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டுள்ளது.

மேலும் பிரான்சில் நடைபெற்று வரும் மாற்றுத்திறனாளி வீரர்களுக்கான 17ஆவது பாராஒலிம்பிக் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று வீரர்கள் பதக்கங்களை வென்று சாதனைப் படைத்துள்ளனர். ஒற்றையர் பிரிவு பேட்மிண்டன் போட்டியில் துளசிமதி முருகேசன் வெள்ளிப் பதக்கமும், மனிஷா ராமதாஸ் வெண்கலப் பதக்கமும் வென்றுள்ளனர். உயரம் தாண்டுதல் போட்டியில் மாரியப்பன் தங்கவேலு வெண்கலம் வென்றுள்ளார். இதன்மூலம் வரலாற்றில் முதல் முறையாக தமிழ்நாட்டைச் சார்ந்த மூன்று வீரர்கள் பாராஒலிம்பிக் போட்டியில் பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ளனர். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்கு நிதி உதவிகள் செய்து, பயிற்சியாளர்களை நியமித்து ஒவ்வொரு விளையாட்டையும், விளையாட்டு வீரர்களையும் தனிக்கவனம் செலுத்தி ஊக்கப்படுத்தியத்தின் விளைவாகத்தான் இன்று தமிழ்நாட்டு வீரர்கள் சர்வதேச அளவில் மிளிரத் தொடங்கி பதக்கங்களை வென்று வருகின்றனர்.

மேலும் தெற்காசியாவில் முதன் முறையாக சென்னையில் இரவு நேர ஸ்ட்ரீட் சர்க்யூட் ஃபார்முலா 4 கார் பந்தயம் கடந்த ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆம் தேதி வெற்றிகரமாக நடைபெற்றது. தமிழ்நாடு அரசு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) சார்பில் நடத்தப்பட்ட இப்போட்டி தெற்காசியாவிலேயே நீளமான ஸ்ட்ரீட் சர்க்யூட் போட்டியாகும். இப்போட்டியின் மூலம் தமிழ்நாட்டின் race tourism மேம்படுவதுடன் ஃபார்முலா 1 கார் பந்தய விளையாட்டை நோக்கி பல்வேறு இளைஞர்கள் வருவதற்கு தொடக்கப்புள்ளியாக அமையும்.

இப்படி தமிழ்நாடு விளை யாட்டுத்துறையில் பல்வேறு புதிய முன்னெடுப்புகளை வெற்றிகரமாக செயல்படுத்தி இன்று இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக தமிழ்நாட்டை உயர்த்திய நமது கழக இளைஞர் அணிச் செயலாளர்மாண்புமிகு அமைச்சர் இளந்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 7**

**தமிழினத்தை வளம்பெறச் செய்த,**

**தமிழர்களின் உயிர்மூச்சாய் விளங்கும் தி.மு. கழகத்தின் பவளவிழா நிறைவு மற்றும் முப்பெரும் விழா!**

சமூகநீதி, சமத்துவம், தமிழ்தமிழர் நலன், மாநில உரிமை போன்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பேரறிஞர் அண்ணாவால் 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நமது திராவிட முன்னேற்றக் கழகம் இந்த 2024 ஆம் ஆண்டு பவள விழா நிறைவைக் கொண்டாடும் நிலையில் பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அரை நூற்றாண்டுகள் கட்டிக்காக்கப்பட்டு இன்று நம்முடைய கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் உலகு போற்றும் அரசியல் பேரியக்கமாக நமது திராவிட முன்னேற்றக் கழகம் உயர்ந்து நிற்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் எண்ணிலடங்காப் போராட்டங்கள், சிறைவாசங்கள், தியா கங்கள், மகத்தான தேர்தல் வெற்றிகள், தோல்விகள், நெருக்கடிகள் என்று இந்த 75 ஆண்டுகள் ஏற்றுக்கொண்ட கொள்கையில் இருந்து சற்றும் சமரசமில்லாமல் பயணிக்கும் நமது இயக்கம் இன்று மக்கள் ஆதரவுடன் பவள விழா நிறைவு கழக முப்பெரும் விழாவினை செப்டம்பர் 17 அன்று சிறப்பாக கொண்டாட இருக்கிறது.

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அயராத உழைப்பில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும், சட்டங்களையும் இயற்றி இன்று எல்லாத் துறைகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்க அடித்தளமிட்டது நமது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் நமது கழகத் தலைவர் அவர்கள் தேர்தல் களத்தில் கொள்கை கூட்டணியை உருவாக்கி தான் எதிர்கொண்ட நாடாளுமன்ற தேர்தல் 2019, உள்ளாட்சித் தேர்தல் 2020, சட்டமன்றத் தேர்தல் 2021, நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022, நாடாளுமன்ற தேர்தல் 2024 மற்றும் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வரை அனைத்து தேர்தல்களில் மகத்தான தொடர் வெற்றியைப் பெற்று இன்று உலகு வியக்கும் திராவிட மாடல் ஆட்சியை நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் நடத்தி வருகிறார்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பவள விழாவினை கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், பெருமையுடன் கொண்டாடுவதற்கு கழக மாணவர் அணி மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் - 8**

**நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் கழக மாணவர் அணி நிர்வாகிகள் நியமனம்!**

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான 2026 சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனையின்படி நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அளவிலான அமைப்புகளுக்கு அமைப்பாளர் துணை அமைப்பாளர்களை நியமனம் செய்வதற்கு ஏதுவாக நேர்க்காணல் நடத்திடும் வகையில் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மாநிலத் துணைச் செயலாளர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கழக மாவட்டங்களில் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட பட்டியலின் படி, அந்தந்த மாவட்டக் கழக செயலாளர்களுடன் கலந்து பேசி நேர்க்காணல் நடத்தி அதில் தகுதி உடையவர்களை தேர்ந்தெடுத்து நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்களின் ஒப்புதலுடன் மாவட்டக் கழக செயலாளர்களின் பரிந்துரை கடிதத்தை பெற்று, மாணவர் அணிச் செயலாளரிடம் இம்மாத இறுதிக்குள் ஒப்படைக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. விரைவாக கழகத் தலைவரின் ஒப்புதல் பெற்று, நியமன அறிவிப்பை வெளியிட செய்யவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.